**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 34/2023 |
| Name | : Subramaniam |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**18.12.2025**

**1 மற்றும் 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கே.கே.புதுாரில் வசித்து வருகிறேன். சர்க்கரை மில்லில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 01.01.2023ம் தேதி இரவு 10.30 மணிக்கு எனது வீட்டின் அருகில் உள்ள கிணற்றின் அருகே ஆஜர் எதிரிகள் கருப்புச்சாமி மற்றும் கார்த்தி (எ) திருமலைசாமி ஆகியோர் மது போதையில் ரகளை செய்து கொண்டிருந்தார்கள். நான் மாட்டிற்கு தீனி போட சென்றேன் அப்போது கருப்புச்சாமியைப் பார்த்து ஏன்பா இங்கே சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டேன். நீ யாருடா கேட்பதற்கு நான் பொது இடத்தில் தானே பேசுகிறேன் என்று பெரிய புடுங்கியா என்று தகாத வார்த்தையால் திட்டினார்கள் நான் போலீஸ்க்கு போன் பண்ணுகிறேன் என்று சொன்ன உடன் கார்த்தி என்னை பின்னால் வந்து பிடித்துக்கொண்டார். அருகில் கிடந்த சவுக்கு கட்டையை எடுத்து கருப்புச்சாமி எனது இடது கை, இடது அல்லை, இடது தொடை பக்கம் அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். நான் போட்ட சத்தம் கேட்டு எனது மனைவி கன்னியம்மாள் ஓடி வந்தார். அவர்கள் வந்து சத்தம் போட எதிரிகளை அவரை கீழே தள்ளி விட்டுவிட்டார்கள்.

அருகில் இருந்தவர்கள் ஓடி வந்த உடன் எதிரிகள் கட்டையை போட்டு விட்டு ஓடிவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நான் மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் இருந்த போது மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.18 17:22:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 34/2023 |
| Name | : Kanniammal |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**18.12.2025**

**1 மற்றும் 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கே.கே.புதுாரில் வசித்து வருகிறேன். 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 01.01.2023 ம் தேதி இரவு 10.30 மணிக்கு மேல் எனது கணவர் ஐயோ என்று போட்ட சத்தம் கேட்டு நான் வெளியே சென்று பார்த்தேன் எங்கள் வீட்டின் அருகில் இருந்த கிணற்றின் அருகே எதிரி கார்த்தி எனது கணவரை பிடித்து வைத்திருந்தார் கருப்புச்சாமி எனது கணவரை சவுக்கு கட்டையை வைத்து அவரது கையில், காலில், இடுப்பில் அடித்துக்கொண்டிருந்தார். நான் ஓடிச் சென்றேன். என்னையும் கருப்புச்சாமி அடித்தார் நான் கீழே விழுந்துவிட்டேன். நான் சத்தம் போட்ட உடன் அருகில் இருந்தவர்கள் ஓடி வந்த உடன் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது கணவரை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது கணவர் மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை பெற்றார். நான் சிகிச்சை எதுவும் பெறவில்லை. எனது கணவர் மருத்துவமனையில் இருந்த போது மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். இது சம்மந்தமாக

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.18 17:22:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 34/2023 |
| Name | : Ranganathan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.12.2025**

**1 மற்றும் 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கே.கே.புதுாரில் வசித்து வருகிறேன். செக்யூரிட்டி வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும் உள்ளுர்காரர்கள். 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 01ம் தேதி இரவு 10.30 மணியளவில் எனது வீட்டின் பின்புறம் உள்ள பழைய கிணற்று மேட்டில் கன்னியம்மாள் ஐயோ மாமா என்று சத்தம் போட்டார் சத்தம் கேட்டு நான் என்னவென்று போய் பார்த்தேன் கிணற்று மேட்டில் அ.சா.1 கீழே படுத்திருந்தார். ஐயோ அம்மா வலிக்குதே என்று சத்தம் போட்டார். ஆஜர் எதிரிகள் இருவரும் அடித்ததாக கேள்விப்பட்டேன். ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் 2ம் தேதி

என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.18 17:22:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்